விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை உரிய விலைக்கு விற்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுவார்கள். அதற்கு ஏதாவது மாற்று வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவர்கள் நெல்லை நிச்சயமாக விற்காமலேயே போய்விட முடியாது. இந்தக் கட்டுப்பாடு இல்லை என்றால் பற்றாக்குறைப் பகுதிகளுக்கும் கடத்தல் நடைபெறும். அங்கிருந்து கிட்டத்தட்ட 10,000 டன் நெல்லை ஏற்கெனவே கடத்திச் சென்றிருக்கிறார்கள். இந்த மாதிரி கடத்தல் நடைபெறாமல் இருப்பதற்காகத்தான் கட்டுப்பாடு வைத்திருக்கிறோம். கட்டுப்பாடு இருந்தால் யார் யார் கடத்துகிறார்கள் என்பதைக் கண்காணிக்க முடியும். ஆகவே, நெல் விற்பனை செய்ய இந்தத் தடை பாதகமாக இருக்காது; கடத்தல்காரர்களுக்குத்தான் பாதகமாக இருக்கும். அந்தப் பகுதியில் எங்காவது நெல் தேக்கம் இருந்தால், அங்கத்தினர் அவர்கள் அதுபற்றித் தெரிவித்தால் நாளையே கொள்முதல் செய்யத் தயாராக இருக்கிறோம்.

4. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவையின் விதி 6, உள்விதி (1) இன் படி, கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமனம் செய்திருக்கிறேன்.

1. திரு. துரைமுருகன்.
2. திரு. வை. பாலசுந்தரம்
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
4. திரு. குழ. செல்லையா .
5. திரு. கே. எ. வகாப்
6. திரு. கோ. இளங்கோவன்.

திரு. கோவை செழியன்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நான் 42-வது விதியின்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். அது பற்றிய விவரங்கள் அறிந்து கொள்ளலாம் என்றுதான். . .

1974 மார்ச் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது.

திரு. கோவை செழியன்: கொடுத்து நான்கு நாளாயிற்று, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுப்பதே தீர்மானத்தின் அவசரத் தன்மையை உத்தேசித்துதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி எல்லாம் என் அறைக்கு வந்து கேட்க வேண்டும். எனினும் உங்களுடைய தீர்மானம் என் ஆய்வில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(5) 1974-75 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டென்னிஸ் அவர்கள் பேசுவார்கள்.

திரு. த. சோனையா: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் என்னுடைய பேச்சை முடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பேச்சு முடிந்து விட்டது. திரு. டென்னிஸ் அவர்கள் இப்போது பேசுவார்கள்.

* **திரு. என். டென்னிஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைவிட, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவதாக கடந்த சில ஆண்டுகளாக இங்கே சமர்ப்பிக்கப்பட்டு வந்த நிதிநிலை அறிக்கைகளைச் சர்பிளஸ் பட்ஜெட்கள். ஆனால் இவ்வாண்டு டெபிசிட் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக கடந்த சில ஆண்டைய பட்ஜெட்டுகளைவிட இவ்வாண்டு பட்ஜெட் உரை நீண்ட அறிக்கையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. டெபிசிட் பட்ஜெட் என்றால் வரி சுமத்தப்படும். அதன் மூலம் அத்தியாவசியமான பண்டங்களின் விலை ஏறும் என்றுதான் அர்த்தம். மேலும் இந்த நீண்ட நிதிநிலை அறிக்கையில் பொதுமக்களின் பொருளாதாரப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணக்கூடிய வழிவகைகள் எடுத்துக் கூறப்